


# ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா



ஒளி - 10 காலாண்டிதழ் ஜூலை - செப்டம்பர் 2016 கதிர் - 3


# காதல் இனிக்கிறது! வாழ்க்கை கசக்கிறது?



காதல் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சொல். ஆனால் எல்லோரும் காதலிக்கிறார்களா என்றால் இல்லை. காதலில் வெற்றியும் உண்டு. தோல்வியும் உண்டு. காதலித்து ஓடிப் போய் திருமணம் செய்துக் கொள்பவர்களும் உண்டு. காதலையே முறைப்படுத்தி பெரிய வர்களின் ஆசியோடு திருமணம் செய்பவர் களும் உண்டு. காதல் திருமணங்கள் எல்லாம் இனிப்பதும் இல்லை. கசப்பதும் இல்லை. தெய்வீக் காதல் என்று எடுத்துக் கொண்டால் அது புனிதமானது. தத்துவங்களை நிலை நாட்டக் கூடியது. தர்மத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்துவது. மனித வாழ்க்கையின் வெளிப்பாட்டை உணர்த்துவது. மனிதனாக இருப்பவன் தெய்வீகக் காதலில் ஈடுபட முடியாது. தெய்வங்கள் அவதாரம் செய்து மனித வாழ்க்கை நெறிமுறைகளை விளக்கு வதற்காக ஆடிய நாடகம்தான் தெய்வீகக் காதல்.

ராதை ஸ்ரீகிருஷ்ணனை காதலித்தாள் என்றால் அது பக்திக்கும், தெய்வத்திற்கும் உள்ள பந்தம். பிரேம பக்தியின் வெளிப்பாடு. ஸ்ரீமுருகன் குறவர் குலத்தில் பிறந்த வள்ளியை மணந்தார் என்று சொன்னால் அங்கே சமரச சன்மார்க்கம் நிலைநாட்டப் படுகிறது. இவற்றையெல்லாம் உதாரணமாக எடுத்துக்கொண்டு யார் வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாமா? என்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது. அதனால் குழப்பம் ஏற்படுகிறது. தெளிவு கிடைக்கவில்லை. காதலை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை. காதலை முறைப்படுத்த முடியுமா? முடியாதா? என்று உள்ளம் தவிக்கிறது. குழம்பிய சூழ்நிலையில் தெளிவு கிடைக்காதவர்கள் தன்னையே அழித்துக் கொண்டு விடுகிறார்கள்.

இந்த சூழ்நிலையில்தான் சித்தர்கள் ஜோதிட சாஸ்திரத்தின் மூலம் நமக்கு வழிகாட்டுகிறார்கள். ஜாதகத்தை தெய்வீக நிலையில் நாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது காதல் திருமணம் தானா? அல்லது கணவன், மனைவி போன்ற உறவா? முறைப் படுத்தப்பட்ட காதல் திருமணமா? அல்லது பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணம் தானா? என்பதை நாம் சொல்லிவிடலாம். இதையெல்லாம் கிரஹங்களை வைத்துதான் நாம் கூறுகிறோம். மனிதன் கிரஹங்களை வென்றவன் கிடையாது. ஒரு திருமணம், இரண்டு திருமணம், மூன்று திருமணம், நான்கு திருமணம் என்று ஒருவருக்கே பல திருமணங்கள் நடக்கும் செய்திகளை நாம் பத்திரிக்கைகளில் படிக்கிறோம். கள்ளத் தொடர்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றிற்கெல்லாம் அந்தந்த ஆன்மாவின் பூர்வ வினையும் கிரஹ தோஷங்களும்தான் காரணம். காதல் திருமணத்திற்கு முக்கிய பங்களிப்பு சுக்கர பகவானுக்கு உண்டு. அதுபோல் இரண்டு திருமணம் மூன்று திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு ராகு, கேது கிரஹங்கள் காரணங்கள் ஆகிறார்கள். ஒரு பெண் ஜாதகத்தில் மாங்கல்ய ஸ்தானம் என்று சொல்லக் கூடிய 8ம் இடம் பலஹீனமாக இருந்தால் திருமண வாழ்க்கையில் கோளாறும், திருமணத் தடையும் ஏற்படத்தான் செய்யும். அதுபோன்று ஒரு ஆண் ஜாதகத்தில் மனைவியின் ஸ்தானமாகிய களத்திர ஸ்தானத்தில் பாவகிரஹங்கள் நீச்ச மடைந்து இருந்தால் திருமணத் தடைகளும், தொடர்பு களும் ஏற்படத்தான் செய்யும். காதல் திருமணமோ, அல்லது பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமோ, ஜாதகம் பொருத்தம் சரியாக இருந்தால் அந்த வாழ்க்கை வெற்றிகரமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கருத்து வேறுபாடுகள் இல்லாத கணவன், மனைவி கிடையாது "ஊடல் இல்லையென்றால் கூடல்" கிடையாது. நித்தம், நித்தம் ஊடலே வாழ்க்கையாக மாறிவிட்டால் மணவாழ்க்கை அர்த்த மற்றதாகிவிடும். அன்யோன்யமான திருமண வாழ்க்கை அமைய ஜாதக பொருத்தம் அவசியமாகிறது. ஜாதகப் பொருத்தம் பார்த்து திருமணம் செய்துக் கொண்டவர்கள் விவாகரத்து பெற வில்லையா? என்று நீங்கள் கேட்கலாம். இங்கேதான் ஜோதிடரின் பங்களிப்பு முக்கியமானது. சித்தர்கள் துணையோடு தெய்வீக நிலையில் பார்த்து சொல்லும் விவரங்கள், திருமணப் பொருத்தங்கள், மணவாழ்க்கை தோல்வி அடைவ தில்லை. அப்படிப்பட்ட தெய்வீக நிலையில்தான் நமது சக்தி பீடத்தில் 18 சித்தர்களும் வழிகாட்டிக் கொண்டிருக் கிறார்கள். அருள்பாலித்துக் கொண்டிருக் கிறார்கள் அதுமட்டுமின்றி சித்ரகுப்தர் சுவாமியும், வாழ்க்கை தடம் புரளாமல் விதியை மாற்றும் வித்தகராக அருள் பாலித்துக் கொண்டிருக்கிறர். அன்னை பராசக்தி மூலாதார சக்தியாக இருந்துக் கொண்டு நம்மையெல்லாம் அரவணைத்துக் கொண்டிருக்கிறாள். நவகிரஹங்களின் பங்கை 18 சித்தர்களும் பிரித்துக் கொண்டு கிரஹ தோஷம், நாக தோஷம், ஸ்திரி தோஷம், புத்திர தோஷம், களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் இவற்றையெல்லாம் போக்கி நிம்மதியான வாழ்க்கையை தருகிறார்கள். அவரவர் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து பரிகாரம் செய்துக் கொண்டால் நிவாரணம் கண்டிப் பாக கிடைக்கும். இவற்றிற்கெல்லாம் சிகரமாக ஜூலை மாதம் 10ம் தேதி நமது சக்தி பீடத்தில் கும்பாபிஷேக தினத்தன்று வருஷாபிஷேகம் நடை பெற உள்ளது. எல்லா தேவதை களுக்கும் மூல மந்த்ர வேள்வியும் நடை பெறவுள்ளது. மேற்கண்ட தோஷங் களெல்லாம் நீங்க, மனிதக் காதல் தெய்வீகக் காதலாக மாறி, மங்கள வாழ்க்கை அமைய, கணவன், மனைவி ஒற்றுமை மேம்பட, திருமணத் தடை அகல, புத்திர பாக்கியம் அடைய, கடன் தொல்லை நீங்க, புதிய வீடு அமைய, பங்கேற்று பலன் அடையுங்கள்.

வளமுடன் வாழ்க.

-குருஜி சர்மா


ஸ்ரீ சேஷஒளியில் சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்

சந்தா ரூ. 101/-

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்''*

பெருமதிப்பிற்குரிய சேஷபக்தர்களுக்கு வணக்கம்.

இந்த இதழில் நான் தங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பும் ஒரு மாமந்திரம் ''பிரார்த்தனை'' பிரார்த்தனை இருவகைப்படும். பொது நல பிரார்த்தனை, சுயநல பிரார்த்தனை, பெரும்பாலும் பொதுநல பிராத்தனைக்கு கூட்டுப் பிரார்த்தனை என்ற வழிமுறையே மிகச் சிறந்தது. பொதுவாக உலக நன்மை மக்கள் வாழ்வின் மேம்பாடு. அனைத்து ஜீவராசிகளின் காப்பு ஆகியவைகளுக்காக செய்யப்படுகிறது. பொது நல பிரார்த்தனை. இப்போது சுயநல பிரார்த்தனைக்கு வருவோம். சுயநல பிரார்த்தனை என்பது ஏதோ நாம் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக செய்யப் படுவது அல்ல. நாம் நமது குடும்பம் நம்மைச் சார்ந்தவர்களுக்காக செய்யப் படுவது. பிரார்த்தனைக்கு மிகச் சிறந்த வலிமை உண்டு.

நாம் நினைக்கும் ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமென்றால் அதற்கு பிரார்த்தனை மிகமிக முக்கியம். பிரார்த்தனை என்பது ஒரு இறை அதிர்வலை மனித செயல்களை விட இறை அதிர்வலைகளுக்கு அதிக சக்தி உண்டு. அந்த இறை அதிர்வலைகளை உருவாக்கும் சக்திதான் பிராத்தனை. அதுவும் அந்த பிரார்த்தனையை நமது உலக மகா சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளை நினைத்து மனமுருகி இடைவிடாது தொடர்ந்து செய்வோமானால் எண்ணிய நல்ல எண்ணங்கள் யாவும் நிறைவேறும். இதற்கு நாம் கோயில் குளம் என்று சுற்ற வேண்டிய அவசியமில்லை. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் படத்தையோ அல்லது அவர் உருவச்சிலை இருந்தால் அவர் முன் அமர்ந்து விளக்கேற்ற வைத்து பூத்தூவி அவரது மூலமந்திரத்தை கூறி அவரது 108 போற்றிகளை அர்ச்சித்து நமது வேண்டுதல்களை அவர்முன் வைப்போமானால் நிச்சயம் நமது பிரார்த்தனை கூடிய சீக்கிரத்தில் சரியான நேரத்தில் நிறைவேறும். இசையால் மலையைக் கரைக்க முடியு மென்றால், பிரார்த்தனையால் சித்தர்களின் உள்ளங்களையும், தெய்வங்களின் மனங்களையும் நிச்சயம் உருக வைக்க முடியும்.

**'உள்ளம் உருகினால் வேண்டுதல் நிறைவேறும்**

**வேண்டுதல் நிறைவேறினால் வாழ்வு வளமாகும்''**

அன்பர்களே! வாழ்வில் எந்த பிரச்சனை வந்தாலும் கலங்காதீர்கள். கருணை உள்ளத்தோடு அள்ளித்தரும் மகான் சேஷாத்ரி ஸ்வாமிகள் இருக்கிறார்.

மனமுருகி வேண்டுங்கள்!

வளம் பெருக வாழுங்கள்!

வேண்டுதல் நிறைவேறியதும் மகானைக் காண வாருங்கள்! மாடம்பாக்கம் பதிணென் சித்தர் சக்தி பீடத்திற்கு அளவில்லாத கருணை மழையில் அருள் அள்ளிச் செல்லுங்கள்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்.

பணிவன்புடன்

மருதபரணி

**ஆடிப்பூர திருவிழா நாள் 5-8-2016**
**ஆடி மாதம் 21ம் தேதி (5-8-2016)**
**வெள்ளிக்கிழமையன்று**
**அகண்ட லலிதா சகஸ்ரநாம பாராயணம்**
**காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை**
**நடைபெறுவதால் சுவாசினிகள் பங்கேற்கலாம்.**

ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாம பாராயணத்தில் பங்கேற்கும் சுவாஸினிகளுக்கு சௌபாக்கிய திரவியங்கள் வழங்கப்படும்.

**சௌபாக்கிய திரவியம் ஒரு செட் ரூ. 200/-**
**(ரவிக்கை துணி, கண்ணாடி, சீப்பு,**
**மை, குங்குமசிமிழ், மருதாணி)**
**அம்பிகையின் விசேஷ அபிஷேகக் கட்டணம் ரூ. 2,500/-**
**அம்பிகையின் விசேஷ பூப்பந்தல் ரூ. 3,000/-**
**அன்னதானம் ரூ. 2,500/-**

## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

**ஜூலை**

| | |
|---|---|
| 4 | அமாவாசை |
| 10 | கும்பாபிஷேக தினம் (மூலமந்திர ஹோமம்) |
| 11 | ஹஸ்தம் |
| 16 | ஆடிப்பண்டிகை |
| 19 | பௌர்ணமி |
| 28 | ஆடிக்கிருத்திகை |

**ஆகஸ்ட்**

| | |
|---|---|
| 2 | ஆடி அமாவாசை<br>ஆடி 18ம் பெருக்கு<br>குருபெயர்ச்சி (குருபகவான் சிம்மம் ராசியிலிருந்து கன்னி ராசிக்கு மாறுகிறார்) |
| 5 | ஆடிப்பூரம் |
| 7 | ஹஸ்தம் |
| 12 | வரலக்ஷ்மி விரதம் (அரூபலக்ஷ்மி பிரதிஷ்டா தினம்) |
| 17 | பௌர்ணமி |
| 25 | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |

**செப்டம்பர்**

| | |
|---|---|
| 30 | மஹாளய அமாவாசை |
| 3 | ஹஸ்தம் |
| 5 | விநாயகர் சதுர்த்தி |
| 16 | பௌர்ணமி |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
**அமைந்துள்ளது.**
**முகவரி எண். 1, சன்னதி தெரு,**
**மாடம்பாக்கம், சென்னை - 600 126.**
**போன் : 044-22281408,**
**22280407, 29710972**
**பாலாலயம் : 2228 1337**
**பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K**
**தி.நகரிலிருந்து 5A Cut Service**
**குரோம்பேட்டையிலிருந்து S3 மினி பஸ்**
**இறங்குமிடம் : சிவன் கோயில்**

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE ADDRESS**

**A-11, Room No. 8, Ground Floor, Shahid Bhagat Singh, CHS Ltd., Bindra Complex, Mahakali Caves Road, Near Holi Spirit Hospital, Andheri, Mumbai - 93. Ph : 28387116**

**Mr. A.L. NARASIMHAN :**

**Flat No. 301, Shiva Pooja Co-operative Housing Society, Plot No. 100, Sector-29, Vashi Navi, Mumbai-400 703.**
**Phone : 022-27881456,**
**Cell : 9967553555**

# ராசி பலன்கள்

## ஜுலை - செப்டம்பர் 2016

### மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திரஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவானின் அருளால் சில அன்பர்களுக்கு புதுமனை புகுவிழா நடக்கும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்கள் பதவி உயர்வு அடைவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்கு கணவனால் மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு தொழிலில் புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு அதிக பலம் கூடும். விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். அஷ்டமத்தில் சனி இருப்பதால் பிரயாணத்தின் போது கவனம் தேவை. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14முதல் 17 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். எதிலும், எங்கும் நிதானம் தேவை. பணியாளர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும். வேலையை மாற்றிக் கொள்ள வேண்டாம். வியாபாரிகள்,தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும். சில பெண்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். குழந்தைகளால் பெற்றோர்களுக்கு கவலை உண்டு. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. கவனம் தேவை. விவசாயிகளுக்கு பிரயாணத்தின்போது எச்சரிக்கை தேவை. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 11 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும். பெண்களுக்கு எதிர்பாராத மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு கலைஞர்களுக்கு அடித்தளம் அமைக்கப்படும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் தண்டிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை ஏற்படும். எச்சரிக்கை. பொதுவாக இந்தமாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். முடிவு எடுப்பதில் நிதானம் தேவை. கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படும் எச்சரிக்கை! வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும். சின்னத்திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் ஆபத்து உண்டு எச்சரிக்கை! விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜன், வெள்ளி கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். காதல்,திருமணம் கைகூடும். நீண்ட நாள் தடைப்பட்ட விஷயங்கள் நல்ல பலனைத் தரும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைத்து மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு வாழ்க்கையில் புதிய நம்பிக்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். சின்னத்திரை கலைஞர்கள் அதிக லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு கௌரவப் பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ் டம தினங்கள் : 13 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பலகீனமாக உள்ளார். இருப்பினும் நீச்ச பங்க ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல், திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு திடீரென்று அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். கடல் வாணிபம் வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அதிக லாபம் கொடுக்கும். பெண்கள் இன்ப சுற்றுலா செல்வார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு தடைகள் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும். விவசாயிகள் கௌரவிக்கப்படுவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். எதிலும், எங்கும் வெற்றி கிடைக்கும். பணியாளர்கள் உயர் அதிகாரிகளிடம் எச்சரிக்கையாக பழக வேண்டும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். இசைக் கலைஞர்கள் கௌரவிக்கப் படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு குழந்தைகளால் ஆதாயம் உண்டு. விவசாயிகளுக்கு வீடு கட்டும் யோகம் தெரிகிறது. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் குரு பகவானோடு சஞ்சரிப்பதால் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டாலும் நினைத்தது நிறைவேறும். பணியாளர்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்கள் உடல் நலத்தை கவனித்துக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் தடங்கல் ஏற்பட்டு வெற்றி கிடைக்கும். அயல்தேச பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் தரும். அரசியல்வாதிகள் சொத்துத் தகராறில் ஈடுபட வேண்டாம். மாத பிற்பகுதியில் விவசாயி களுக்கு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகுகாலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : வள்ளலார் சித்தர், இடைக்காடர் சித்தர், கிழமை : புதன்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். மனக்குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். சிக்கல் விலகும். திருமண விஷயத்தில் வெளிச்சம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு திருப்புமுனை ஏற்படும். பெண்களுக்கு நீண்ட நாள் கனவு நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். அயல்நாட்டிலிருந்து கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஜுலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். காதல் திருமணம் கைகூடும். பேச்சில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்பட இடமுண்டு. மாணவர் களுக்கு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வெள்ளித் திரை கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. விவசாயிகள் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : செவ்வாய், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, ராகு கலாம், வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரயம் பெற்றுள்ளார். பண விஷயத்தில் கவனம் தேவை. பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் வியாபாரத்தை விரிவுபடுத்த வேண்டாம். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் சக நண்பர்களோடு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகள் பங்கு மார்க்கெட்டையும், சூதாட்டத்தையும் தவிர்க்க வேண்டும். விவசாயிகளுக்கு ஓரளவு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பம் ஏற்படும். திருமண விஷயத்தில் அவசரம் காட்ட வேண்டாம். காதலை ஒத்தி வைப்பது நல்லது. பணியாளர்கள் அதிக நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண முடுக்கம் ஏற்படும் எச்சரிக்கை! பெண்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு வெளிநாட்டு தகவல் ஆதாயம் தரும். அரசியல்வாதிகள் குடும்ப பிரச்சனையை அமைதியாக தீர்த்துக் கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக கவனத்துடன் இருந்தால் இந்த மாதம் நல்ல மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

குருஜி கே.வி.எல்.என். சர்மா



# சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல் திருமணம் கைகூடும். சில அன்பர்களுக்கு புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. பணியாளர்கள் கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பணம் முடக்கம் ஏற்படும். கவனம் தேவை. பெண்களுக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு கடன் தொல்லை நீங்கும். பெண் அரசியல்வாதிகள் அதிக லாபம் அடைவார்கள். விவசாயிகள் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன்று. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரயம் பெற்றுள்ளார். இருப்பினும் குரு பெயர்ச்சி நல்ல பலன்களே கொடுக்கும். காதல், திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு இடப்பெயர்ச்சி உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு திடீர் பண வரவு உண்டு. அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் கூடும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். தடைக்கல் படிக்கல்லாகும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 20 முதல் 22 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். ராஜயோகம் நீச்ச பங்க யோகம் ஏற்பட்டுள்ளது. எதிலும், எங்கும் வெற்றி கிடைக்கும். நினைத்தது நடக்கும். பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் தெரிகிறது. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு கடல் வாணிபம் ஆதாயம் தரும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் குழப்பம் நீக்கி தெளிவு அடைவார்கள். கலைஞர்களுக்கு புதிய நட்பினால் ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு தொடர்பினால் பெறும் பணம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*



# கன்னி

(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். வீண்விரயத்தைத் தவிர்க்கவும். காதல் திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு நிலுவை பாக்கித் தொகை வசூலாகும். வியாபாரிகள், தொழிலதிபர்கள், கடல் வாணிபம் செய்பவர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு அதிக லாபம் தரும். அரசியல்வாதிகள் பேச்சில் கவனமாக இருக்கவும். விவசாயிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் மகிழ்ச்சிகரமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழன், வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரயம் பெற்றுள்ளார். சோதனைகள் ஏற்பட்டு நீங்கும். காதல் முயற்சி தோல்வி அடையும். பணியாளர்களுக்கு கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். பன்னாட்டு தொழில்நுட்பம் கலைஞர்களுக்கு கை கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு பதவியில் முடக்கம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும்.பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேயர் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். சோதனைகள் ஏற்பட்டு நீங்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம். பண முடக்கம் ஏற்படும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். பணியாளர்கள் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும். பெண்களுக்கு தீய சக்தியால் திடீர் உடல்நிலை பாதிப்பு உண்டு. பரிகாரம் தேவை. மாணவர்கள், நண்பர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அரசாங்கத்தால் கலைஞர்களுக்கு ஓரளவு ஆதாயம் கிடைக்கும். சகோதர, சகோதரிகளால் அரசியல்வாதிகளுக்கு தொல்லை ஏற்படும். விவசாயிகள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சித்ரகுப்தர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*



# துலாம்

(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் ஏற்படும். காதல் திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படும். பெண் அரசியல்வாதிகள் அதிக லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் சுபவிரய மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழன், வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 28 முதல் 30 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் திருமணம், கிரஹப்பிரவேசம் போன்ற சுப விரயங்கள் ஏற்படும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு புதிய சொத்து வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு திடீர் அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். மாணவர்களுக்கு மனத்திற்கினியே சம்பவம் நடக்கும். கலைஞர்களுக்கு தொழிலில் அதிக லாபம் கிடைக்கும். பெண் அரசியல்வாதிகள் அதிக லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு பதவியில் கௌரவம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பலகீனமாக உள்ளார். சுபவிரயஸ்தானத்தில் குருபகவான் இருப்பதால் சுபநிகழ்வுகள் குடும்பத்தில் நடக்கும். சில அன்பர்கள் புதுமனை புகுவார்கள். பணியாளர்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஒரு சொத்தை விற்று மறு சொத்து வாங்குவார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சின்னத்திரை கலைஞர்களுக்கு புதிய நட்பு ஆதாயம் தரும். பிரயாணத்தின்போது அரசியல்வாதிகளுக்கு கவனம் தேவை. விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பாம்பாட்டி சித்தர், அழுகனி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*



# விருச்சிகம்

(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**ஜூலை**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தின்போது கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. பணியாளர்கள், நிதானத்தை கடைபிடிக்கவும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும். பெண்கள் விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். சின்னத் திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமைறு. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 5 தேதி வரை, 30 தேதி முதல் ஆகஸ்ட் 1ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஆகஸ்ட்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். மனக்கவலை நீங்கும். காதல், திருமணம் கைகூடும். ஏழரை சனியின் பாதிப்பு இருந்தாலும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பெண்களுக்கு புதிய ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். பிதுர்ராஜ்ய சொத்து கலைஞர்களுக்கு வந்து சேரும். பிள்ளைகளால் அரசியல்வாதிகளுக்கு லாபம் உண்டு. விவசாயிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 28 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**செப்டம்பர்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் ஆட்சியடைந்துள்ளார். லாப ஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக்கிறார். சுபகாரியங்கள் சிறப்பாக நடைபெறும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்கள் சுற்றுலா சென்று மகிழ்வார்கள். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று படிக்கும் யோகம் தெரிகிறது. இசைக் கலைஞர்கள் அதிக ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகள் நிலத் தகராறில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு மனத்திற்கினிய சம்பவம் நடக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

### ஜுலை

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல் திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்க புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் காதல் விவகாரத்தில் ஈடுபட வேண்டாம். வெள்ளித்திரை கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கும். விவசாயிகளுக்கு புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### ஆகஸ்ட்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபெயர்ச்சி சாதகமாக இல்லாததால் நிதானம் தேவை. கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். காதலில் அவசரம் வேண்டாம். பணியாளர்கள் திடீர் முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம் எச்சரிக்கை! மற்ற ஆண்களால் பெண்களுக்குத் தொல்லை உண்டு. மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். சின்னத்திரை கலைஞர்கள் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பதவியில் இறக்கம் உண்டு. விவசாயிகள் வீண் வம்பில் ஈடுபட வேண்டாம். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், கிழமை : வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை, 28 முதல் 31 வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### செப்டம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும், எங்கும் நிதானம் தேவை. பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படலாம். மேல் அதிகாரிகள் அனுசரித்து செல்வது நலம். கணவன், மனைவி உறவில் சிறு சிறு சலனம் ஏற்பட்டு நீங்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அகலக்கால் வைக்கவேண்டாம். பெண்களுக்கு மற்ற பெண்களால் குழப்பம் உண்டாகும் எச்சரிக்கை. கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். புதிய நட்பின்மூலம் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை ஏற்படும். விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

### ஜுலை

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் தேவை. பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் செலவை கட்டுப்படுத்த வேண்டும். பெண்களுக்கு சிறுநீர் கோளாறு ஏற்படலாம். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். கலைஞர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் திடீர் ஆதாயம் உண்டு விவசாயிகளுக்கு நகை வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 7 முதல் 9 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### ஆகஸ்ட்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். காதல் திருமணம் கைகூடும். சுபநிகழ்வுகள் நடக்கும். பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம் ஏற்படும். ஆன்மீகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு நீண்ட நாள் கனவு நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். அயல்தேசத்திலிருந்து கலைஞர்களுக்கு நல்ல தகவல் வரும். அரசியல்வாதிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கும். விவசாயிகளுக்கு புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும். நினைத்தது நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், செவ்வாய்க் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 6 தேதி வரை, 31 மதல் 2 செப்டம்பர் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### செப்டம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 11ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவான் நல்ல இடத்தில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். காதல், திருமணம் கைகூடும். நீண்ட நாள் தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு உண்டு. வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனதிற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவச் செலவுகள் உண்டு. விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல திருப்பங்கள் கொடுக்கும் மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

### ஜுலை

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபார்வை ராசிக்கு இருக்கிறது. காதல் திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு நினைத்தது நிறைவேறும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்கள் புனித பிரயாணம் மேற்கொள்வார்கள். மாணவர்களுக்கு பள்ளியில் சுமுகமான சூழ்நிலை ஏற்படும். கலைஞர்களுக்கு பணவரவு கூடும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு புதிய வாகன சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : குருவாயூரப்பன், கிழமை : புதன், வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 9 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### ஆகஸ்ட்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வீண் மனக்குழப்பம் ஏற்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. பொருளாதார முடக்கம் தெரிகிறது. மேலதிகாரிகளிடம் பணியாளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு மர்ம உறுப்புகள் சம்மந்தப்பட்ட மருத்துவச் செலவுகள் ஏற்படும். மாணவர்களுக்கு கூடாநட்பு கூடாது. கலைஞர்களுக்கு கடன் தொல்லை உண்டு. சகோதரர்களால் அரசியல்வாதிகளுக்கு பிரச்சனைகளை சந்திப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு பிரயாணத்தின்போது கவனம் தேவை. விவசாயிகளுக்கு நிவாரணம் உண்டு. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை , 29ம் தேதி ஆகிய நாட்களில் முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### செப்டம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டம குரு ஆட்டி படைக்கும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். காதல் முயற்சியில் ஈடுபட வேண்டாம். பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்கவும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும். பெண்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். கலைஞர்களுக்கு திடீர் பிரயாணத்தால் லாபம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு சகோதர, சகோதரிகளால் தொல்லை ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை : செவ்வாய், திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சித்ரகுப்தர், கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 5ம் தேதி வரை, 29 முதல் 2 அக்டோபர் வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்



(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

### ஜுலை

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும், எங்கும் நிதானம் தேவை. கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படலாம். கவனம் தேவை. பணியாளர்கள், அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள், கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்கள் சக ஊழியர்களால் பாதிக்கப்படுவார்கள் எச்சரிக்கை! கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு சொத்தில் தகராறு ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல பலன்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### ஆணீஸ்ட்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிந்தன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பண விஷயத்தில் கவனம் தேவை. காதல் திருமணம் கைகூடும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு திடீர் பணவரவு ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்கு கௌரவ பதவி கிடைக்கும். மாணவர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் ஏற்படும். கலைஞர்கள் நல்ல ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு திடீர் பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பாம்பாட்டி சித்தர், அழுகணி சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 11 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### செப்டம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருபார்வை இருப்பதால் சுப பலன்கள் அதிகமாக நடக்கும். காதல் திருமணம் கைகூடும். நீண்ட நாள் தடைப்பட்ட விஷயங்கள் அனுகூலமாகும். பணியாளர்களுக்கு பதவியில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத அரசாங்கப்பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 5 முதல் 7 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# நடந்து முடிந்த விழாக்கள்

கடந்த ஏப்ரல் மாதம் 10ம் தேதி திருமாங்கல்ய திருநாள் மிக விசேஷமாக சக்திபீடத்தில் நடைபெற்றது. திரளான சுவாஸினிகள் கலந்துகொண்டு ராஜகாளியம்மனின் அருள் பெற்றனர். விசேஷ அன்னதானம் நடைபெற்றது.








## சித்ரா பௌர்ணமி விழா









## குரு பெயர்ச்சி விழா

ஆகஸ்ட் 2ம் தேதி குரு சிம்ம ராசியிலிருந்து கன்னி ராசிக்கு பெயர்கிறார்

பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய ராசிகள்

**மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம்**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.




அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

## சித்தர் சக்திபீடத்தில் விழாக்கள்



நமது சக்திபீடத்தில் சிறிய விழாக்கள் (அறுபதாம் கல்யாணம், புண்யாஹம், சீமந்தம், வளைகாப்பு, காது குத்தல்) நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத்தினர் செய்துள்ளனர்.

ஏழை எளியவர்களுக்கு உரிய சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி பயனடையுங்கள்.

எங்கு நடத்துவது, எப்படி செய்வது என்று குழப்பம் அடைய வேண்டாம்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 94440 26969
(செயலாளர் அறக்கட்டளை)

## உலக மகா ஸத்குரு

உண்மையின் உறைவிடமாக, தாய்மையின் பிறப்பிடமாக, பக்தியின் திருவுருமாக, திருநீறு தேகமாக, தேஜஸ்மயமாக, அருளாசியின் பொக்கிஷமாக, உலக மகா ஸத்குருவான நம் குருநாதர் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள், மாடம்பாக்கம் பதினொன் சித்தர் ஸ்ரீ சக்திபீட பிருந்தாவன ஆலயத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

எத்தனை இன்னல்கள், மின்னல்களாக நம் கண் எதிரே நின்று பயமுறுத்தினாலும், அலைகளை காளலாகக் களைந்து, நம்மை கரை சேர்த்துக் காக்கும் கருணை கடவுள் அவர். ஜாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட, அளப்பரிய சக்தி கொண்ட, அதிசய மகான் அவர். ஏழை எளியோர்களின் காவலராகி, எங்கும் நிறைந்திருக்கும், அற்புதமூர்த்தி அவர்.

ஆகையினால் நம் குடும்பங்களை காக்கின்ற தெய்வீக பாதுகாவலரான அவரது திருவடிகளை பற்றி, ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கை பயணத்தை துவங்கும் பொழுது, மனம் பக்குவம் அடைகின்றது. சிந்தனையில் தெளிவு பிறக்கின்றது. வளங்களும், நலன்களும், சீரும், சிறப்பும், ஒவ்வொன்றாக கூடிவந்து, பேரும், புகழும் கிடைக்கின்றது. இத்தகு மேன்மையை ஒவ்வொரு பக்தர்களும், தம் வாழ்வில் உணர்ந்துள்ளார். எனவே மகிமை பொருந்திய நம் மகானின் பொற்பதம் பணிந்து போற்றி மகத்தான நற்பலன்களை அடைவோம்.

- உமாபரணி

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினொன் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினொன் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினொன் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## “தெய்வீக மருத்துவர் குருநாதர்”



எனது மனைவி பல்செட் கட்டிக் கொண்டு பல ஆண்டுகள் கடந்து விட்டிருந்தது. சில வருடங்களுக்கு ஒரு முறை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எங்களுக்குத் தெரியாததால் பற்கள் நாக்கில் உரசி, நாக்கில் புண் ஏற்பட்டு, உணவு, நீர் எதையும் முழுங்க முடியாமல் தவித்தாள். மருத்துவரை நாடியதில், அது புற்றுநோயின் ஆரம்பம் என்று கூறினார். நாங்கள் மிகவும் பயந்து வேறு சில மருத்துவர்களிடமும் (மெட்ராஸ் கேன்சர் இன்ஸ்டிட்யூட் மற்றும் கித்வாய் கேன்சர் சென்டர் உட்பட) கருத்து கேட்டதில், அது புற்றுநோய்தான் என்ற உறுதியாகிவிட்டது. இதற்கு அறுவை சிகிச்சை தான் ஒரே வழி என்று கூறி, அதன் முறைகளை விவரித்த போது மிகவும் பயங்கரமாக இருந்தது. கழுத்தின் இரு பக்கமும் கீறி, புற்று நோய் அணுக்களைக் களைவார்களாம். மூக்கிலும் கழுத்திலும் துளை போட்டு திரவ உணவு செல்லவும், மூச்சுவிடவும் குழாய் பொருத்துவார்களாம். செலவும், குணமாவதற்கான கால அவகாசமும் கணிசமாக இருக்குமாம். இத்தகைய பயங்கரமான நிலையைத் தவிர்த்து அறுவை சிகிச்சை இன்றி குணமாகும் வாய்ப்பு உண்டா என்று ஆயுர்வேதம் மற்றும் ஹோமியோ முறைகளையும் அணுகினோம். பலன் ஏதுமின்றி நோயின் வலுவும், வேதனையும் அதிகரித்தன.

இந்நிலையில் குருஜி சர்மா அவர்களின் மூலம் நமது மஹான் அருள்வாக்கில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்படியும், தாம் கவனித்துக் கொள்வதாகவும் கூறி அருளினார். இதைத் தொடர்ந்து பெங்களூர், எஸ்வந்தபூரிலுள்ள கொலம்பியா ஏஷியா மருத்துவமனையில் சென்ற வருடம் மார்ச் மாதம் அட்மிட் செய்தோம். அவர்களும் அறுவை சிகிச்சை குறைந்த பட்சம் எட்டு அல்லது பத்து மணி நேரம் நடக்கும். ப்ளாஸ்டிக் சர்ஜரி மூலம், உடலின் இன்னொரு பகுதியிலிருந்து சதையை எடுத்து, நாக்கில் பொருத்துவோம். ஆனால் பொருத்திய பாகத்தில் உணர்வு இருக்காது என்றும் கூறி, திரவ உணவு உட்கொள்ள, வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து ஒரு குழாயைப் பொருத்தினர்.

23-3-2016 அன்று காலை அறுவை சிகிச்சை தொடங்கியது. ஆனால் மஹானின் மருத்துவக் கரங்களின் மூலம் அறுவை சிகிச்சை மூன்றே மணி நேரத்தில் வெற்றிகரமாக முடிந்தது. நாக்கை பாதிக்கும் குறைவாகத்தான் வெட்ட வேண்டியிருந்ததாம். ப்ளாஸ்டிக் சர்ஜரிக்கு அவசியம் இருக்கவில்லையாம். இதனால் செலவும் கூட மிகவும் குறைவாகத்தான் இருக்கும் என்று கூறியது எங்களை மிகவும் மகிழ்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கியது.

இதைத் தொடர்ந்து 30 ரேடியேஷன் மற்றும் 6 கீமோதெரபி எடுத்துக் கொண்டதில், இப்போது என் மனைவி கெட்டியான உணவு உண்ணமுடியாவிட்டாலும், மஹானின் தங்கக் கரங்களினால் செய்த அறுவை சிகிச்சையாதலால் கெட்டியான திரவ உணவு உண்கிறாள். மருத்துவர்களும் புற்றுநோய் சம்பந்தப்பட்ட பயம் இனி இல்லை என்றும் உறுதியாகக் கூறிவிட்டனர்.

நாங்கள் பல ஆண்டுகளாக மஹானின் பக்தர்கள்தாம். அவர் எங்களுக்குப் பல விதங்களில் அருள்புரிந்தவாறு இருக்கிறார். அவரின் தொடர்ந்த அருளால், என் மனைவியால் சென்னைக்கு ரயில் பயணம் செய்யமுடியும் பட்சத்தில் கூடிய விரைவில் மாடம்பாக்கம் சென்று, மஹானின் அருளை நேரில் பெற ஆவலாக இருக்கிறோம்.

இத்தகைய அற்புதத்தை அதாவது என் மனைவிக்கு மனதிடத்தையும், அறுவை சிகிச்சைக்கான நிதி பலத்தையும், எங்களுக்கு ஆறுதலையும் தரவல்ல சக்தி மஹானின் அருளின்றி வேறு என்னவாக இருக்க முடியும்.

மஹானின் பொற்பாதங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்களுடன்.

ஆர். வேணுகோபாலன், பெங்களூர்

## கலியுகமும் நாம ஸங்கீர்த்தனமும்

ஒவ்வொரு யுகத்திற்கும் ஒரு தருமம், ப்ரபாவம் சொல்லப் பட்டுள்ளது. விஷ்ணு புராணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

க்ருத யுகத்தில் த்யானம் செய்தும், த்ரேதாயுகத்தில் யாகங்கள் செய்தும், துவாபர யுகத்திலே அர்ச்சனை செய்தும் எந்த பலன்கள் அடையப்படுகின்றதோ அந்த பலன்கள் அனைத்தும் கலியுகத்திலே நாம ஸங்கீர்த்தனம் மூலம் அடையப்படுகின்றது. அதனால்தான் சமீபகாலமாக பல இடங்களிலே நாம ஸங்கீர்த்தன வைபவங்கள் ஏராளமாக நடைபெறுகின்றன. மாடம்பாக்கம் சக்திபீட பிருந்தாவனத்திலே 16-3-2000 முதல் (சுமார் 16 ஆண்டுகளுக்கு மேலாக) வாரத்தில் 3 நாட்கள், அதாவது புதன், வியாழன், ஞாயிறுகிழமைகளில் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை நாம ஸங்கீர்த்தனம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 26-6-2016 நிலவரப்படி இதுவரை 1613 பஜனைகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்கிறது. இந்த நாம ஸங்கீர்த்தனம் மன்னார்குடி ஸ்ரீபாபு ராஜ கோபால பாகவதர் மற்றும் குழுவினரால் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நாம ஸங்கீர்த்தனம் ஸம்ப்ரதாய பஜனை அடிப்படையில் நடக்கிறது. இந்த நடைமுறையில் ஆரம்பத்தில் நாமாவளிகள் பாடி, த்யான ஸ்லோகங்கள் சொல்லப்படுகின்றன. தொடர்ந்து தோடய மங்கள கீர்த்தனைகள் (ஐந்து பாடல்கள்) பாடப்படுகின்றன. உடன் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பேரில் கீர்த்தனை, கோவிந்தபுரம் ஸத்குரு போதேந்திர குரு ஸ்வாமிகள், திருவிடைநல்லூர் ஸ்ரீதர் அய்யாவாள் குரு கீர்த்தனை, மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் த்யான கீர்த்தனைகள் இசைக்கப்படுகின்றன. பிறகு லோகமகாகுரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்வாமிகள், ஞானாந்த குரு, ஸ்ரீ ஹரிதாஸ் ஸத்குரு, ஸ்ரீராகவேந்திர குரு, தியாகராஜ ஸத்குரு கீர்த்தனைகள் பாடப்படுகின்றன. தொடர்ந்து குரு அபங்க பாடல்கள் பாடி, பிறகு ஜயதேவரின் அஷ்டபதி, நாராயண தீர்த்தர் தரங்கம், ராமதாஸர், புரந்தரதாஸர், சதாசிவ ப்ரம்மேந்திரர், கோபாலகிருஷ்ண பாரதியார், ஊத்துக்காடு வேங்கட கப்பய்யர், தியாகராஜர் முதலானோர் இயற்றியவைகள் பாடப்படுகின்றன. தொடர்ந்து பூஜை பாடல்கள் அதாவது புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், ஹாரத்தி போன்றவை பாடப்படுகின்றன. பிறகு கணேசரில் ஆரம்பித்து ஸ்ரீ ஆஞ்சநேயர் வரையிலும், சித்தர்கள் பாடல்களும், ஐயப்பன் பாடல்களும் இடம் பெறுகின்றன. பிறகு மங்கள ஹாரத்தி பாட்டு, மங்கள ஸ்லோகம் பாடப்பட்டு நாம ஸங்கீர்த்தனம் முடிவு பெறுகிறது. இந்த ஸம்ப்ரதாய பஜனை நடைமுறை மிகவும் நுட்பமானது. மிகவும் அரிதானது, ப்ராசீனமானது. ஒவ்வொரு பாட்டுக்கு இடையிலும் நாமாவளிகள் இசைக்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சம்.

பல இடங்களில், அதாவது ஆலயம், குரு பீடம், ஸத் ஸங்கம், பஜனை மடம் போன்ற இடங்களில் தொடர்ந்து ஆயிரக் கணக்கான பஜனைகள் நடைபெறலாம், பல பாகவதப் பெரியோர்கள் நாம ஸங்கீர்த்தனம் செய்திருக்கலாம், செய்தும் வரலாம். ஒரே இடத்தில் ஒரேவிதமான அதாவது ஸம்ப்ரதாய பஜனை அதே பாகவதர் தொடர்ந்து செய்யப்படும் நிகழ்ச்சி இந்த சக்திபீட ப்ருந்தாவனத்தில்தான் நடக்கிறது.

இந்த நாமஸங்கீர்த்தன வைபவம் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆசியாலும், குருஜி ஸ்ரீ சர்மா அவர்களின் அன்புக்கட்டளையால் தொடர்கிறது. இதை செய்யும் பாக்கியம், வாய்ப்புகள் எனக்கு கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன். போன ஜன்மத்தில் பெரியோர்கள் செய்த பூர்வ புண்யத்தினாலும் சித்தர்கள், சேஷாத்ரி ஸ்வாமிகள் அநுக்ரகத்தினாலும் குருஜி ஸ்ரீ சர்மா அவர்களின் பரிபூர்ண ஆசியாலும் எனக்கு இந்த பாக்கியம் கிடைத்துள்ளது.

திரு. பாபுராஜகோபால பாகவதர்

## காகபுஜண்டர் போற்றிகள்

1. மகா ருத்ரரே போற்றி!
2. சனீஸ்வர பகவானின் நண்பரே போற்றி!
3 ஸ்ரீம், ஹ்ரீம், லம், நம: ஸ்வம், பீஜாட்சரத்தில் வசிப்பவரே போற்றி!
4. அசுரர்களை அழிப்பவரே போற்றி!
5. தேவர்களைக் காப்பவரே போற்றி!
6. ஸ்ரீ ராமரை பூஜிப்பவரே போற்றி!
7. அன்னப்பிரியரே போற்றி!
8. மானஸா தேவியை வணங்குபவரே போற்றி!
9. சிவசக்தி ஐக்கியத்தை தரிசிப்பவரே போற்றி!
10. மகானுக்கெல்லாம் மகானே போற்றி!
11. மனிதர்கள் வணங்கும் தெய்வமே போற்றி!
12. சீதாராமரின் புதல்வரே போற்றி!
13. கோடிலிங்கங்களை பூஜிப்பவரே போற்றி!
14. பாவத்தைப் போக்குபவரே போற்றி!
15. நாரகாணப் பிரியரே போற்றி!
16. ஸ்ரீ ராமர் பாதத்தை தரிசனம் செய்த ஸ்ரீ காக புஜண்ட சித்தர் ஸ்வாமியே போற்றி! போற்றி!

**ஸ்ரீ சேஷ ஒளி**
திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எஸ்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமஸுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மதுசூதனன்
திருமதி. உமாராணி

அலுவலக உதவியாளர்
திருமதி. பி. லக்ஷ்மி

வடிவமைப்பு
திருமதி. வித்யா

பதிவு அலுவலகம்
பழைய. 21/3, புதிய. 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 04424959734, 24953705
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info

**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கருப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கருப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கருப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

### அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

பால் விநியோகம் : பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

இதனால் ஏற்படும் பலன்கள் :

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நித்திய அன்னதானம் : சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. அன்னதானம் ரூ. 2000 வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.